1996 பிப்ரவரி 28]

வினா எண் 144, திரு. ஆ. செல்லதுரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

144—

அரசு மருத்துவமனைப் படுக்கைகள் அதிகரித்தல்

***35776—திரு. ஆ. செல்லதுரை :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி-சாலங்குடியிருப்பு அரசு மருத்துவமனைப் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆ. செல்லதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சி யுகத்தின் புனிதத் தலைவியாம் எங்கள் இரட்சகர் அம்மாவின் பொற்பாதம் தொட்டு வணங்கி என் கேள்வியைக் கேட்க முன்வருகிறேன். சாலங்குடியிருப்பு அரசு மருத்துவமனை, சாலங்குடியிருப்பு கிராமத்திற்கும் உடன்குடி கிராமத்திற்கும் சேர்ந்து இருக்கின்ற ஒரே அரசு மருத்துவமனையாகும். உடன்குடியைப் பொறுத்தவரையில் 18 ஊராட்சிகளைக் கொண்டது, கிட்டத்தட்ட 2 லட்சம் மக்கள் வாழ்கிற பகுதியாகும்; 90 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கிறவர்கள், அங்கே தனியார் மருத்துவமனைகள் பல இருந்தும், அவர்கள் அனைவருமே அரசு மருத்துவமனைக்குத்தான் வரவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அங்கே 12 படுக்கைகள் இருக்கின்றன. அத்தனை படுக்கைகளும் பயனற்ற நிலையில் உள்ளன. அந்தப் படுக்கைகள் போதாமல் உள்ளன. இன்னும் 25 படுக்கைகள் அதிகமாக இருந்தால் அங்கே வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கின்ற மக்களுக்கு, நோய்வாய்ப்படும் மக்களுக்கு, அந்த நோய்ப் பிணியை நீக்குவதற்கு வசதி வாய்ப்பு இருக்கும். ஆகவே, இன்றைக்கு பசிப் பிணியைப் போக்கிவருகிற நம்முடைய புனிதத் தலைவியின் புரட்சித் தலைவியின் ஆட்சியில் நோய்ப் பிணியைப் போக்குவதற்கு அந்த மருத்துவமனையில் படுக்கைகளை அதிகமாகக் கொடுப்பதற்கு - மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடன்குடி நிலைமையை நன்கு உணர்ந்தவர்; ஒரு காலத்தில் 15, 20 நாட்கள் அங்கேயே இருந்து தேர்தல் பணியைச் செய்தவர் - எனவே, அதை மறுபரிசீலனை செய்து, வறுமைக் கோட்டுக்குக்

கீழ் வாழ்கிற அந்த மக்களுக்கு அந்த நோய்ப் பிணியை நீக்குவதற்கு அரசு மருத்துவமனையில் படுக்கைகளைக் கூட்டிக் கொடுக்க மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே 12 படுக்கைகள் இருக்கின்றன. அவசியம் என்று கருதினால், அதற்கு மேலே அரசாங்கம் ஆய்வு செய்து, அவசியம் என்று கருதினால் நடவடிக்கை எடுக்கலாம். இது ஆரம்ப சுகாதார நிலையமாகத்தான் இப்போது இயங்கி வருகிறது. ஏற்கெனவே அது மருத்துவமனையாக இருந்தது; அது ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் அந்த மருத்துவமனையிலே எல்லாப் பணிகளும் செய்யப்படுகின்றன. எனவே, கூடுதலான படுக்கைகள் தேவை என்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. செல்லதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடன்குடி பெரிய வியாபார ஸ்தலமாகும். நான் ஆரம்பத்திலே சொன்னதைப் போல, 2 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அங்கே வாழ்கிறார்கள். அத்தனை பேரும்--கிட்டத்தட்ட 90 சதவீதம் பேர் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழ்கிறார்கள். அவர்கள் அரசு மருத்துவமனைக்குப் போய் பேறுகாலம் பார்ப்பதற்கும், அங்கே பணம் கொடுத்து தங்களுடைய பிணிகளைப் போக்குவதற்கும் முடியாத நிலையில் கஷ்டத்திலே இருக்கிறார்கள். அங்கே மூன்று டாக்டர்கள் வேண்டும். ஒரு பெண் மருத்துவரும், 2 ஆண் மருத்துவர்களும் உண்டு. தற்சமயம் ஒரு பெண் மருத்துவர் மட்டுமே பணியாற்றி வந்தார். அந்த பெண் மருத்துவரும் இப்போது விடுப்பிலே போய்விட்டதால் இப்போது தூத்துக்குடியிலே இருந்துதான் ஒரு டாக்டர் வந்து போயிருக்கிறார். ஆகவே, அந்த மருத்துவமனையிலே சரியாக, அந்த நோயாளிகளைப் பராமரிக்க முடியாமல் கஷ்டமான சூழ்நிலையிலே இருந்து கொண்டு இருக்கிறோம். அங்கே டாக்டர்களுக்குக் குடியிருப்பு இருந்தது....

முற்பகல் 10.15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: படுக்கை எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்பதுதான் கேள்வி. துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். இன்னொரு டாக்டரை நியமிக்க வேண்டும் என்று கேளுங்கள்.

திரு. ஆ. செல்லதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே டாக்டர்கள் குடியிருப்பு இருந்தது. இன்றையதினம் அது பழுதாகிக் கிடக்கிறது. அந்தக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தும்

1996 பிப்ரவரி 28]

இன்னும் அந்த டாக்டர்களுடைய குடியிருப்பைக் கட்டித் தரவில்லை. அந்தக் குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கும், செவிலியர்களும் வெளியிலே இருந்துதான் வரவேண்டிய சூழ்நிலை இருப்பதால் அவர்களுக்கும் குடியிருப்பு கட்டித் தருவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். மேலும், இந்த இருபதாம் நூற்றாண்டில் சோதனைகளைச் செய்வதற்காக அங்கே ரத்தப் பரிசோதனை நிலையமும், ஸ்கேன் எடுப்பதற்கும் வசதிகள் இல்லை. ஆகவே, அவைகளையும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செல்லதுரை, நீங்கள் அந்த ஆஸ்பிட்டலில் இருக்கக்கூடிய எல்லா விவரங்களையும் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆ. செல்லதுரை : இதையெல்லாம் செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தபடி அங்கே அவசியம் ஏற்பட்டால் கூடுதலான படுக்கைகளைக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். மூன்று மருத்துவர் இடங்கள் அங்கே இருக்கின்றன. அதிலே ஏதாவது காலியாக இருக்குமேயானால் அவைகள் நிரப்பப்படும். மேலும் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்கு அவசியம் ஏற்படின் அரசாங்கம் அதை ஆய்வு செய்து அந்தக் கட்டிடத்தை அப்படியே பழுதுபார்க்க முடியுமா என்பதைப் பார்த்து, தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 145, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

145—

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

காசநோய்ப் பிரிவு ஏற்படுத்துதல்

47325—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு தாலுகா மருத்துவமனையில் காசநோய்ப் பிரிவு ஏற்படுத்த அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?